[31st August 1961

DEPUTY SPEAKER : Questions 1548 and 1549 may be taken up together.

Municipal Engineer (Vellore)

* 1548 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN and SRI M. P. SARATHI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் நகர சபையில் வேலைபார்க்கும் இன்ஜினியர் அவர்கள் எத்தனை வருட காலமாக வேலை பார்த்து வருகிறார் ?

(இ) சட்டப்படி எத்தனை வருடம் ஒருவர் ஒரு இடத்தில் வேலை பார்க்கலாம் ?

(உ) இவருக்கு மட்டிலும் விதிவிலக்கு ஏன் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) The Municipal Engineer has been at Vellore since 9th August 1956;

(இ) and (உ) Normally, an officer is not disturbed before the completion of a term of three years in one station. But on administrative grounds, it is open to the Government to transfer an officer within that period or to retain him beyond that period.

* 1549 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் நகரசபையில் வேலைபார்க்கும் என்ஜினியர் அவர்கள் பேரில் 50 குற்றச்சாட்டுகளைக்கொண்ட ஒரு மனு ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டதா ?

(இ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) Yes, Sir.

(இ) A report has been called for from the Chief Engineer, Public Works Department (General), Madras, on the several allegations contained in the petition. His report is awaited.

SRI V. K. KOTHANDARAMAN : பல குற்றச்சாட்டுகளுக்குக் காரணமாயிருக்கும் ஒரு என்ஜினியர் சுமார் ஐந்தாறு வருட காலமாக ஒரே இடத்தில் இருந்திருக்கிறார். ட்ரான்ஸ்பர் வரும்போதெல்லாம் அதைக் 'கான்ஸல்' செய்யக்கூடிய அளவுக்கு அமைச்சர் அவர்கள் தலையிடுவதன் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பல குற்றச்சாட்டுகளுக்கு அவர் காரணம் என்று கூற முடியாது. பல குற்றச்சாட்டுகள் அவர் மீது கூறப்பட்டிருக்கின்றன. அவை இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன.

SRI P. U. SHANMUGAM : குற்றச்சாட்டுகளை விசாரிக்கும்போது அந்த உத்தியோகஸ்தரை அங்கே வைத்துக்கொண்டு விசாரிப்பது அவ்வளவு முறையல்ல என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவரை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அவர்மீதுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்கப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அவர்கள் அங்கிருந்து மாற்றப்பட்டிருக்கிறார்.

SRI M. P. SARATHI : வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருந்தாலும், இப்பொழுது மூன்றுமாத லீவில் வேலூரிலேயே இருந்துகொண்டு, இந்தப் புகார்களை இல்லாமல் செய்வதற்கான வேலையைச் செய்துகொண்டு வருகிறார்களே, அது அமைச்சருக்குத் தெரியுமா ?